போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

I-A பாகத்தின் ஸப்ளிமெண்ட்.

SUPPLEMENT TO PART I-A OF THE FORT ST. GEORGE GAZETTE,

FEBRUARY 21, 1922.

நெ. 8.] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலை, 1921-ம்ஹூ பெப்ரவரிமீ 21உ. [விலை, 6 பை.

கவர்ன்மெண்ட் விளம்பரங்களின் தமிழ்மொழிபெயர்ப்பு.

Tamil Translations of Notifications by Government.

லோகல் ஸெல்ப் கவர்ன்மெண்ட் டிபார்ட்மெண்ட்.

விளம்பரம்.

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ், 1922-ம்ஹூ ஜனவரிமீ 31உ.

நெ. 91.—

பொது ஜனங்களின் போக்குவரவு நிமித்தம் திருநெல்வேலி ஜில்லாவில் திசையன்விளையிலிருந்து திருச்செந்தூர் வரையில் ட்ராம்வே லைனை ஏற்படுத்திப் பராமரிப்பதற்காக அனுமதி கொடுக்கும்பொருட்டு இந்துதேசத்து ட்ராம்வே ஆக்டின்படி பின்னும் செய்யப்பட்ட உத்தரவு.

பீடிகை.—1886-ம்ஹூத்திய இந்துதேசத்து ட்ராம்வே ஆக்டின் நிபந்தனைகளை அனுசரித்து, இதில் பின்னால் சொல்லப்படுகிற விர்த்திக்காரர்கள் - திருநெல்வேலி ஜில்லாவில் திசையன்விளையிலிருந்து திருச்செந்தூருக்குப் போகும் ஒரு ட்ராம்லைனை அடையகுரிச்சியிலிருந்து குலசேகரபட்டணம் வரையில் போகும் கிளை சகிதமாக 31.25 மைலுக்கு டிஸ்ட்ரிக்ட் போர்டாரின் அனுமதியுடன் ஏற்படுத்தியிருக்கிறார்கள்; மேலும், அவர்கள் - அடையகுரிச்சியிலிருந்து திருச்செந்தூருக்குப் போகும் ட்ராம் லைனை இப்போதைய பாக்டரி (தொழிற்சாலை) முனையிலிருந்து கடற்கரையோரமாக நேராய்த் திருச்செந்தூருக்கு (மொத்தத்தில் 25 மைல்தூரம்) போகும்படி விஸ்தரித்து அந்த லைனின் ரேகை அமைப்பை மாற்ற இப்போது விருப்பம் கொண்டவர்களாய், இப்போதுள்ள ட்ராம் லைனைப் பொதுஜனங்களின் போக்கு வரவு நிமித்தம் பராமரித்து வருவதற்காக அனுமதி கொடுத்து 1918-ம்ஹூ மேமீ 28உயுள்ள போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட் I-A பாகத்தின் 349-350-வது பக்கங்களிலே 602-ம் நெ. விளம்பரத்தில் (இங்க்லிஷிலே) பிரசுரிக்கப்பட்டிருக்கும் உத்தரவை ரத்துசெய்து, அதற்கு பர்த்தியாக திசையன்விளையிலிருந்து குலசேகரபட்டணம் வழியாய்த் திருச்செந்தூருக்குப் போகும் லைனுக்குப் பிரயோகப்படக்கூடியதாய இந்துதேசத்து ட்ராம்வே ஆக்டின்படி ஒரு புதிய உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று இப்போது கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

சென்னபட்டணம் கவர்ன்மெண்டார் - அப்பிரகாரமே ஷை உத்தரவை ரத்துசெய்து இப்போது கேட்கப்படும் அதிகாரத்தை, இதில் பின்னால் கண்டிருக்கும் ஷரத்துகளின் படிக்கும், திட்டங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்படுத்தியும் கொடுப்பது யுக்தமென்று அபிப்பிராயப்பட்டு, அதற்கு பர்த்தியாக அடியிற்கண்ட உத்தரவைப் பிறப்பிக்கிறார்கள் :—

(1) **அர்த்தங்கள்.**—1886-ம்வருஷத்திய இந்துதேசத்து ட்ராம்வே ஆக்டில் அர்த்தம் கூறும் பகுதிகளிலே எந்தெந்த சொற்களுக்கும் சொற்றொடர்களுக்கும் என்னென்ன அர்த்தங்கள் கூறப்பட்டிருக்கின்றனவோ அதே அர்த்தங்களை அந்தச் சொற்களும் சொற்றொடர்களும், சங்கதியினாலாவது முன்பின் தொடர்ச்சியினாலாவது அப்படி அர்த்தம் கொள்ளுவதற்கு விரோதமொன்றும் இல்லாவிட்டால், இந்த உத்தரவில் உடையவைகளாகும்.

ஆனால், இந்த உத்தரவிலே ‘ட்ராம்வே’ என்னும் வார்த்தை - இந்த உத்தரவினால் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிற ட்ராம்வேயென்றும் வேலைகளென்றும் அர்த்தமாகும் ; ‘இந்த ஆக்ட்’ என்னும் வார்த்தைகள் - 1886-ம்வருஷத்திய இந்துதேசத்து ட்ராம்வே ஆக்டென்றும், ஸ்டாட்யூட் மூலமாய்ச் செய்யப்பட்டு தற்காலத்தில் அமுலிலிருக்கிற அதன் யாதொரு திருத்தமென்றும் அர்த்தமாகும் ; ‘கவர்ன்மெண்டார்’ என்னும் வார்த்தை - சென்னபட்டணம் கவர்ன்மெண்டார் என்று அர்த்தமாகும்.

(2) **பிரயோகப்படத்தக்க சட்டம்.**—ஷை ஆக்டின் நிபந்தனைகளுக்கும், ஷை ஆக்டின்படி அப்போதைக்கப்போது செலாவணியாய்க்கொண்டிருக்கிற விதிகளின் நிபந்தனைகளுக்கும், இந்த உத்தரவின் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு, ட்ராம்வேயைப் பராமரித்து அதைச் சேர்ந்த வேலையை நடத்தவேண்டும்.

(3) **விர்த்திக்காரர்கள்.**—ஈஸ்ட் இந்தியா டிஸ்டில்லரீஸ் அண்ட் ஷுகர் பாக்டரீஸ் லிமிடெட் என்னும் கம்பெனியாரும், அவர்களிடமிருந்து கவர்ன்மெண்டாருடைய அங்கீகாரத்தின்மேல் அந்தக் கம்பெனியை ஒப்படை பெற்றவர்களும் இந்த உத்தரவின் காரியங்களுக்காக விர்த்திக்காரர்களாவார்கள்.

(4) **ட்ராம்வேயைப் பராமரிப்பது.**—இந்த உத்தரவின் நிபந்தனைகளுக்குட்பட்டு, விர்த்திக்காரர்கள் - இதில் பின்னால் விவரிக்கப்பட்டிருக்கிற ட்ராம்வேயை அதற்குச் சம்பந்தமாகவாவது அதன் காரியங்களுக்காகவாவது வேண்டியிருக்கிற சகல மூஸ்தீதுகள், வசதிகள் ஆகிய இவைகள் சகிதமாகப் பராமரித்து, அதைச் சேர்ந்த வேலையை நடத்தி, அதை உபயோகிக்கலாம்.

(5) **இதனால் அனுமதி கொடுக்கப்பெற்ற ட்ராம்வே.**—இந்த உத்தரவினால் அனுமதி கொடுக்கப்பெற்ற ட்ராம்வே எதுவென்றால்—

சுமார் 25 மைல் நீளமுள்ளதாய் திசையன்விளையிலிருந்து திருச்செந்தூர் வரையில் அவசியமான கடக்குமிடங்கள் சகிதமாக [2 அடி (கேஜ்) அளவில்] போடப்பட்டிருக்கும் ஒரு இரட்டை ரெயில் லைன்.

(6) **வண்டிவிட ஆரம்பிக்கவேண்டிய தேதி.**—விர்த்திக்காரர்கள் உடனே பொதுஜனங்கள் போக்குவரவு செய்வதற்காக ட்ராம் வண்டியை விட ஆரம்பிக்கவேண்டும்.

(7) **அபாயம் நேரிடாதபடி பாதுகாப்பது சம்பந்தமான திட்டங்கள்.**—ஜனங்களுக்கு அபாயம் நேரிடாதபடி பாதுகாப்பதற்காக அப்போதைக்கப்போது அவசியமானவைகளென்று கவர்ன்மெண்டாருக்குத் தோற்றும் சீர்திருத்தங்களை விர்த்திக்காரர்கள் ட்ராம்வேயில் செய்யவேண்டும்.

(8) **ட்ராம் லைனை விஸ்தரிப்பது.**—இந்த ட்ராம் லைனானது - திருநெல்வேலி திருச்செந்தூர் ரெயில்வேயின் ஸ்டேஷன் (யார்டின்) வளவின் உடபுறம் வரையில் போகும்.

(9) **விதிக்கத்தக்க வீதம்.**—விர்த்திக்காரர்கள் - கவர்ன்மெண்டாரின் உத்தரவை முன்னதாகப் பெற்றுக்கொள்ளாமல் போக்குவரவுக்காக அடியிற்கண்ட வீதங்களுக்கு அதிகமாய் விதிக்கக்கூடாது ; அவையாவன :—

பிரயாணிகளுக்கு வீதம்	...	ஒவ்வொரு பிரயாணிக்கும் மைல் ஒன்றுக்கு ஆறு பை.
சாமான்களுக்கு வீதம்	...	ட்ரக் என்னும் சரக்கு வண்டியில் ஏற்றப்படும் பாரத்தின் விஷயத்தில் - மைல் ஒன்றுக்கு மணங்கொன்றுக்கு 2 பை.
		அதைவிட குறைந்த பாரத்தின் விஷயத்தில் - மைல ஒன்றுக்கு மணங்கொன்றுக்கு 3 பை.

(10) **வண்டிகள் எத்தனை தடவை விடப்படுமென்பதும் வேகமும்.**—விர்த்திக்காரர்கள் ட்ராம்வேயின்மேல் எத்தனை வண்டித்தொடர்களை விடுவது போதுமானதென்று தீர்மானிக்கக்கூடுமோ அதற்கு அதிகமாக வண்டித்தொடர்களை விடும்படியாவது, எந்த நேரங்களில் அல்லது எவ்வளவு வேகமாய் வண்டித் தொடர்களை விடுவது அவசியமென்று அவர்கள் எண்ணக்கூடுமோ அந்த நேரங்களிலும் அவ்வேக வீதத்தை அனுசரித்துமன்றி மற்றப்படி வண்டித் தொடர்களை விடும்படியாவது அவர்களைக் கேட்கக்கூடாது ; ஆனால், இந்த

விஷயங்களில் விர்த்திக்காரர்களின் தீர்மானத்தைப்பற்றி விர்த்திக்காரர்களுக்கும் டிஸ்ட்ரிக்ட் போர்டாருக்கும் விவாதம் ஏற்படும் பட்சத்தில், அதைக்குறித்து கவர்ன்மென்டாருக்குத் தெரிவிக்கவேண்டும்; அவர்களுடைய தீர்மானம் முடிவானதாகும். கவர்ன்மென்டாரின் தீர்மானம் விர்த்திக்காரர்களுக்கு விரோதமாயிருக்கும்பட்சத்தில், பின்னும் வண்டித்தொடர்கள் விடுவதற்கு அவசியமாயிருக்கக்கூடிய வண்டி முதலியவைகளை ஏற்படுத்திக்கொள்வதற்காக விர்த்திக்காரர்களுக்கு நியாயமான காலம் கொடுக்கப்படும்.

(11) **விர்த்திக்காரர்களின் சொந்த போக்குவரவுக்குள்ள முந்திய பாத்தியதை.**—விர்த்திக்காரர்களின் சொந்த போக்குவரவுக்கான தேவைகள் எப்பொழுதும் முதலில் கவனிக்கப்படவேண்டும்; ஷை தேவைகளுக்குட்பட்டு, விர்த்திக்காரர்கள் - ட்ராம் லேன் வேலையை நன்றாய் நடத்துவதற்காக, லோகொமோடிவ் என்னும் தானாய் இயங்கும் வண்டிகள், (பிரயாணி) வண்டிகள், வாகன்கள் இவைகள் உட்பட, போதுமானவரையில் என்ஜின் முதலிய வண்டிகளை வைத்திருக்கவேண்டும்; ஆனால், இந்த விஷயங்களில் விர்த்திக்காரர்களால் செய்யப்பட்ட ஏற்பாடுகள் போதாதென்று டிஸ்ட்ரிக்ட் போர்டார் எண்ணினால், அந்த சங்கதியை கவர்ன்மென்டாருக்குத் தெரிவிக்கவேண்டும்; கவர்ன்மென்டாருடைய தீர்மானம் முடிவானதாகும். கவர்ன்மென்டாருடைய தீர்மானம் விர்த்திக்காரர்களுக்கு விரோதமாயிருக்கும் பட்சத்தில், வேண்டிய வண்டி முதலியவைகளை ஏற்பாடுசெய்துவைப்பதற்காக விர்த்திக்காரர்களுக்கு நியாயமான காலம் கொடுக்கப்படும்.

(12) **விசேஷ வண்டித்தொடர்கள்.**—விர்த்திக்காரர்கள்—சாதாரண வண்டித்தொடர்களின் கால அட்டவணைக்கு பாதகமில்லாமல், திருவிழாக் காலங்களில் கூடியமட்டில் விசேஷ வண்டித்தொடர்களை விடவேண்டும்.

(13) **கிரயத்துக்கு வாங்குவது.**—இந்த உத்தரவின் தேதி முதல் 50 வருஷகாலமான பிறகு எப்போதாகிலும் டிஸ்ட்ரிக்ட் போர்டார் - கிரயத்துக்கு வாங்கிக்கொள்வதைக் குறித்து ஷை ஆக்டிலுள்ள அதிகாரங்களைச் செலுத்தலாம். குலசேகரபட்டணம் - திசையன்விளை பிரிவின் விஷயத்திலே, கிரயத்துக்கு வாங்கிக்கொள்வதற்காக இந்த ஆக்டில் ஏற்பட்டிருக்கும் அதிகாரங்களை டிஸ்ட்ரிக்ட் போர்டார் செலுத்தும்போதெல்லாம், ட்ராம்வேக்காக விர்த்திக்காரர்களுக்குச் செலுத்தவேண்டிய தொகையானது - அந்த ட்ராம்வேயின் அப்போதைய மதிப்புத் தொகைக்குச் சரியானதாயிருக்கவேண்டும்; கிரயத்துக்கு வாங்கப்படுகிற தேதிக்கு முற்பட்டுப் பூர்த்தியான கடைசி ஐந்து வருஷத்துக்குக் கிடைத்த ட்ராம்வேயின் சராசரி வருஷாந்தர நிகர வருமானத்தை இருபத்தைந்தால் பெருக்கி வரும் தொகைக்குச் சரியான தொகையாக ஷை மதிப்புத் தொகையைக் கொள்ளவேண்டும்; இதற்காகச் செலவாயிருக்கும் மூலதிரவியத் தொகையில் அது நூற்றுக்கு 100 க்குக் குறையாமலும் 125 க்கு அதிகப்படாமலும் இருக்கவேண்டும்; மேலும், ஷை கிரயத்தொகையைச் சென்னபட்டணத்திலே விர்த்திக்காரர்களுக்கும் அவர்களுடைய சட்டசம்மதமான பிரதிநிதிகளுக்கும் அவர்களிடம் ஒப்படை பெற்றவர்களுக்கும் கிரயகாலத்திலே இந்தியாவில் செலாவணியாகும் நிஷ்கரிஷையான நாணயமூலமாகச் செலுத்தவேண்டும்.

குலசேகரபட்டணம் பாக்டரியிலிருந்து திருச்செந்தூர் வரையிலுள்ள பிரிவின் விஷயத்திலே, டிஸ்ட்ரிக்ட் போர்டார் திருசெந்தூரிலிருந்து குலசேகரபட்டணம் வரையிலுள்ள தங்களுடைய லேனை விஸ்தரிக்கும் எந்தக் காலத்திலாவது ட்ராம் லேனின் ஷை பிரிவை எடுத்துவிட விர்த்திக்காரர்களுக்கு அனுமதி கொடுக்கப்படும்.

(14) **கணக்குகளை கவர்ன்மேன்டார் தணிக்கைசெய்வது.**—விர்த்திக்காரர்கள் - ட்ராம்வேயின் மூலதனத்தையும் வருமானத்தையும் குறித்த கணக்குகளைப்பற்றிய அரை வருஷத்துக்கான ஸ்டேட்மென்டுகளை, பிரசித்தம் செய்வதற்கு முன்பாக பரிசோதித்துத் தணிக்கை செய்யும்பொருட்டு, கவர்ன்மென்டாருக்கு அனுப்பவேண்டும்.

(15) **ட்ராம்வேயைக் குத்தகைக்குவிட விர்த்திக்காரர்களுக்குள்ள அதிகாரம்.**—இந்த உத்தரவிலுள்ள நிபந்தனைகளுக்கும் கவர்ன்மென்டாருடைய அங்கீகாரத்துக்கும் உட்பட்டு, விர்த்திக்காரர்கள் - யாதொரு நபர் அல்லது நபர்களுக்காவது, (கார்ப்பொரேஷன்) சட்டப்படி சேர்ந்த யாதொரு சங்கத்தாருக்காவது யாதொரு கம்பெனியாருக்காவது ட்ராம்வேயையாகிலும் அதன் யாதொரு பாகத்தையாகிலும் உபயோகிக்கும்படியான சுதந்தரத்தையும், அதற்காக இந்த ஆக்டின்படி அனுமதி கொடுக்கப்பெற்ற கட்டணங்களைக் கேட்டுப் பெற்றுக்கொள்வதற்கான சுதந்தரத்தையும் குத்தகை அல்லது குத்தகைகள் மூலமாக மாற்றலாம். ஆனால் எப்போதும், இந்த உத்தரவு பிறந்த தேதிமுதல் ஐம்பது வருஷத்துக்கு மேற்பட்ட யாதொரு காலஅளவுக்கு அந்த குத்தகை அல்லது குத்தகைகளைச் செய்துகொள்ளக்கூடாது; மேலும், அந்த குத்தகை அலலது குத்தகைகள் காலங்கடந்த பிறகு இன்னும் ஏதாவது குத்தகை அல்லது குத்தகைகள் செய்துகொள்வதாயிருந்தால் இந்த ஆக்டின் 22-வது பிரிவினாலும் இந்த உத்தரவினாலும் கொடுக்கப்பட்டுள்ள கிரயத்துக்கு வாங்கும்படியான அதிகாரங்களை டிஸ்ட்ரிக்ட் போர்டார் செலுத்தும் காலம் அல்லது காலங்களிலாவது அவைகளுக்கு முன்பாவது காலங்கடந்து போகும்படியாகச் செய்துகொள்ளவேண்டும். அல்லாமலும், இந்த உத்தரவினால் விர்த்திக்காரர்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் சகல கடமைகளும் பொறுப்புகளும் குத்தகைதாரர்களையும் அம்மாதிரியே கட்டுப்படுத்தக்கூடியவைகளாகும்.

(16) **விற்பனைசெய்ய விர்த்திக்காரர்களுக்குள்ள அதிகாரம்.**—கவர்ன்மெண்டாருடைய அங்கீகாரத்துக்குட்பட்டு, விர்த்திக்காரர்கள் - இந்த உத்தரவினால் விதிக்கப்பட்டிருக்கும் கடமைகளுக்கும் உத்தரவாதங்களுக்கும் உள்ளாகி, இதனால் கொடுக்கப்பட்டிருக்கிற சுதந்தரங்களையும் அதிகாரங்களையும் ஆதிக்கங்களையும் எந்தக் காலத்திலாவது விற்பனைசெய்யலாம் அல்லது ஒப்படை செய்யலாம் அல்லது மாற்றலாம்: அப்படி விற்பனை செய்ததாவது ஒப்படை செய்ததாவது மாற்றியதாவது பூர்த்தியாவதன்மேல், அதைக்குறித்து முறையே கவர்ன்மெண்டாருக்கும் டிஸ்ட்ரிக்ட் போர்டாருக்கும் எழுத்துமூலமாக நோடிஸ் கொடுத்த பிறகு, அப்படிப்பட்ட சகல சுதந்தரங்களும் அதிகாரங்களும் ஆதிக்கங்களும் கடமைகளும் உத்தரவாதங்களுமாவது, முறையே அவைகளில் அப்போது இருந்துகொண்டு செலாவணியாகத்தக்கைவகளா யுள்ளவைகளாவது - விர்த்திக்காரர்களுக்கு உண்டாயிருப்பதற்கு பர்த்தியாக, அந்தக் கிரயதாரர் அல்லது கிரயதாரர்களுக்காகிலும் ஒப்படை பெற்றவர் அல்லது ஒப்படை பெற்றவர்களுக்காகிலும், மாற்றப்பெற்றவர் அல்லது மாற்றப்பெற்றவர்களுக்காகிலும் உண்டாயிருக்கும்படி இந்த உத்தரவு பிறந்திருந்தாலெப்படியோ அப்படியே, சந்தர்ப்பத்துக்கேற்றபடி விர்த்திக்காரர்களிடத்திலிருந்து பெற்ற அந்த கிரயதாரர் அல்லது கிரயதாரர்களுக்கோ, ஒப்படைதாரர் அல்லது ஒபபடைதாரர்களுக்கோ, மாற்றப்பெற்றவர் அல்லது மாற்றப்பெற்றவர்களுக்கோ மாற்றப்பட்டவைகளாகவும் சங்கிரமிப்பவைகளாகவும் எண்ணப்படும்; மேலும், அந்த சுதந்தரம் முதலியவைகளை விர்த்திக்காரர்களிடத்திலிருந்து கிரயத்துக்கு வாங்கினவர் அல்லது வாங்கினவர்களாவது, ஒப்படைபெற்றவர் அல்லது ஒப்படைபெற்றவர்களாவது, மாற்றப்பெற்றவர் அல்லது மாற்றப்பெற்றவர்களாவது செலுத்தலாம்: அல்லாமலும், ஷை சுதந்தரம் முதலியவைகள் அவர்களைச் சேரும்.

(17) **கவர்ன்மேண்டார் ரெயில்வே ஆக்டை ட்ராம்வேக்குப் பிரயோகிப்பது.**—(i) ஏற்படுத்தப்போகும் ட்ராம்வேயிலாவது இபபோதிருக்கும் ரெயில்வே ஏற்பாட்டிலாவது செய்யப்படும் விஸ்தரிப்புகள் காரணமாக ஷை ட்ராம்வேயானது யாதொரு ரெயில்வேயுடன் எப்போதாகிலும் சேர்க்கப்படுமானால், அந்த ட்ராம்வேக்கு 1890-ம்வருஷத்திய இந்துதேசத்து ரெயில்வே ஆக்டை உடனே பிரயோகிக்க கவர்ன்மெண்டாருக்கு அதிகாரம் உண்டு; அப்போது அந்த ட்ராம்வே ஒரு ரெயில்வேயாக ஆவதுடன், அது ரெயில்வே போர்ட் என்னும் விசாரணைச் சபையாரால் பரிபாலனம் செய்யப்படும்.

(ii) அப்படிப்பட்ட சந்தர்ப்பத்திலே சொந்தக்காரர்கள் 1890-வருஷத்திய இந்துதேசத்து ரெயில்வே ஆகடின்படி வேண்டியிருக்கிற நிலைமைக்கு அந்த லைனைக் கொண்டுவரத் தயாராயிராவிட்டால், முந்தின மூன்று வருஷங்களில் கிடைத்த சராசரி நிகரவருமானத்தை இருபத்தைந்தால் பெருக்கி வரும் தொகையைக் கொடுத்து ட்ராம்வேயைக்கிரயத்துக்கு வாங்கிக்கொள்ள இந்தியா கவர்ன்மெண்டாருக்குச் சுதந்தரம் உண்டு; இந்தத் தொகையானது - ட்ராம்வேக்காக வாஸ்தவமாய்ச் செலவாயிருக்கும் மூலதிரவியத்தொகையில் நூற்றுக்கு 100 க்கு குறையாமலும் 120 க்கு அதிகப்படாமலும் இருக்கவேண்டும். இந்தியா கவர்ன்மெண்டார் இந்த ட்ராம்வேயைக் கிரயத்துக்கு வாங்கிக்கொண்டு, விர்த்திக்காரர்கள் தங்களுடைய சொந்தப் போக்குவரவுக்காக சொந்தத்தில் ஒரு ட்ராம்வேயை ஏற்படுத்திக்கொள்ள இஷ்டப்படுகிற பட்சத்திலே, அதற்கு எவ்வித ஆட்சேபணையும் செய்யப்படமாட்டாது; ஆனால், கவர்ன்மெண்டார் அதற்காக திரவியசம்பந்தமான உதவியொன்றும் செய்யமாட்டார்கள்.

எப். ஜெ. ரிச்சர்ட்ஸ்,
கவர்ன்மெண்ட் ஸெக்ரெடரி.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
Tamil Translator to Government.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.